# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## THIRD YEAR EXAMINATIONS IN BACHELOR OF ARTS (EXTERNAL) – 2007 / 2008
## HELD IN AUGUST - 2008

## ECS 3.15 – ECONOMIC DEVELOPMENT

எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்குக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. (அ) "அபிவிருத்திப் பொருளியல் குறைவிருத்தி நாடுகளைப் பற்றியதாகும்" கருத்துரைக்குக. (08 புள்ளிகள்)

(ஆ) குறிப்பிட்ட காலப்பகுதியில் குறைவிருத்திப் பொருளதாரம் ஒன்று எந்தளவு சமூகப் பொருளாதார முன்னேற்றத்தினை அடைந்துள்ளது என்பதனை ஆராய்வதில் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய பிரதான விடயங்களை ஒப்பிட்டு விளக்குக. (12 புள்ளிகள்)

02. (அ) W.A. Lewis என்பவரால் முன்வைக்கப்பட்ட சமச்சீரற்ற மாதிரி உருவினை விளக்குக. (08 புள்ளிகள்)

(ஆ) இலங்கையின் பொருளதார வளர்ச்சியினை விளக்குவதில் இம்மாதிரி உருவின் பொருத்தப்பாட்டினை ஆராய்க. (12 புள்ளிகள்)

03. (அ) ஒரு நாடு அபிவிருத்தி நிலையை அடைந்துகொள்ள W. றொஸ்ற்ரோ (Walt Rostro) என்பவரால் முன்வைக்கப்பட்ட பொருளாதார வளர்ச்சிக் கட்டங்களை விளக்குக. (08 புள்ளிகள்)

(ஆ) அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் அபிவிருத்தி என்ற நிலையை அடைய இம் மாதிரி உருவினை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதனையும், அதன் சாத்தியப்பாட்டினையும் விளக்குக. (12 புள்ளிகள்)

04. உலகின் பல்வேறு பிராந்தியங்களிலும் அபிவிருத்தியில் வேற்றுமை காணப்படுவதற்குரிய காரணங்களை விளக்குக.

(20 புள்ளிகள்)

05. "வாழ்க்கைத்தர மேம்பாடு பல்வேறு காரணிகளால் அளவிடப்படுகின்றது. எனினும் வாழ்க்கைத்தர உயர்வினை விளக்கும் மிக முக்கிய குறிகாட்டியாக பொருளாதார வளர்ச்சி விளங்குகின்றது." இக்கூற்றினை விமர்சன ரீதியாக விளக்குக.

(20 புள்ளிகள்)

06. "கிராமங்களிலும் நகரங்களிலும் பொருளாதார, சமூக சந்தர்ப்பங்களை சமமாக பங்கிடுவதன் மூலம் கிராமிய நகர்ப்புற இடப்பெயர்வு, சமனற்ற வளர்ச்சி, சார்பு வறுமை, கீழுழைப்பு போன்ற பிரச்சினைகளைத் தீர்க்கலாம்." இக்கூற்றிற்குப் பின்னணியாக உள்ள அடிப்படை நியாயங்களை விளக்குக.

(20 புள்ளிகள்)

07. குறைவிருத்திப் பொருளாதாரம் ஒன்றில் தொழில்மயமாக்கல் செயன்முறையினை ஆரம்பிப்பதற்கு ரொஸன்டின் ரொடான் (Rosenstein Roden) முன்வைத்த வழிமுறைகளை ஆராய்ந்து விளக்குக.

(20 புள்ளிகள்)

08. (அ) "Kuznet வளையி பற்றிய கருதுகோளானது கோட்பாட்டு ரீதியான ஆதாரத்தை கொடுத்ததுடன் மட்டுமன்றி விருத்தியடைந்துவரும் நாடுகளில் அதிகரித்து வரும் சமமின்மையை கவனத்திற் கொள்ளாது விடவும் தூண்டியுள்ளது." இக்கூற்றைப் பரிசீலனை செய்க.

(13 புள்ளிகள்)

(ஆ) பொருளாதார வளர்ச்சியின் மீது சமமின்மை (Inequitably) யானது எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதனை விளக்குக.

(07 புள்ளிகள்)

***